**தலைப்பு 327 - காணி பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 327 - காணி பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் காணி பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 10 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூன் 07 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.
தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காண்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாக காட்டுவதன் காரணமாக இடம்பெறுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் இணங்குகின்றன எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபார்சுகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

**2. நிதி மீளாய்வு**

**2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளன.

**அவதானிப்புக்கள்**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி<br><br>ரூபா | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | | |
| நி.பி. 1645(அ) | இல்லை | வாகன பதிவு புத்தகங்கள் நாளதுவரையாக்கப்பட்ட நிலையில் வைக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டிய போதிலும் , திணைக்களத்திற்கு சொந்தமான வாகனங்கள் தொடர்பான பதிவு புத்தகங்கள் குறைபாடுகளுடன் பராமரிக்கப்பட்டன. கணக்காய்வு மாதிரி பரிசோதனையின் பிரகாரம் இலக்கம் PK - 7050, | எதிர்காலத்தில் இந்த குறைபாடுகளை தவிர்ப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | இலக்கம் PE - 1685 மற்றும் இலக்கம் JV - 1497 ஆகியவற்றைக் கொண்ட வாகனங்களுக்காக பராமரிக்கப்படுகின்ற பதிவு புத்தகங்களில் வாகனம் தொடர்பான விவரங்கள் பக்கத்தில் வாகன அடிப்படை விவரங்கள், எரிக்கப்பட்ட எரிபொருளின் அளவு, வருடாந்த வருமான அனுமதிப்பத்திரம் பற்றிய விவரங்கள் , உரிமை பரிமாற்றம், விபத்துக்கள், ஓட்டுநர்கள் மாற்றம், பயணம் தொடர்பான மாதாந்தப் பொழிப்பு போன்ற தகவல்கள் உள்ளடக்கப்படவில்லை. | | |
| (ஆ) | அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தின் 2022 திசெம்பர் 13 ஆந் திகதிய 2022/05 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டியின் 3.2 ஆம் பந்தி | 1,501,080 (முற்பண பெறுவனவு)<br><br>1,490,567 (முற்பண கொடுப் பனவு) | 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று மற்றும் திறைசேரி அச்சீட்டு SA-52 இன் பிரகாரம் ஒப்பிடப்பட்டபோது நிதி செயலாற்றல் கூறறில் முற்பண கணக்கு பெறுவனவு மற்றும் கொடுப்பனவு முறையே ரூபா 17,775,377 மற்றும் ரூபா. 12,065,063 ஆக இருந்ததுடன் அது திறைசேரிக் குறிப்புகளின்படி, முற்பண கணக்கு பெறுவனவு மற்றும் கொடுப்பனவு முறையே ரூபா 19,276,457 மற்றும் ரூபா 13,555,630 ஆக இருந்தது. அதன்படி, குறுக்குப்பதிவுகளின் மூலம் முற்பண பெறுவனவு மற்றும் கொடுப்பனவு பெறுமதிகள் நிதி செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட்டமையால் முற்பண பெறுவனவு ரூபா 1,501,080 ஆலும்,முற்பண கொடுப்பனவு ரூபா 1,490,567 ஆலும் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | நிதி செயலாற்றல் கூற்றில் குறுக்குப்பதிவுகள் உள்ளடக்கப்பட வேண்டிய தேவை இன்மையால் அவ்வாறு உள்ளடக்கப்பட்ட வில்லை. | அரச கணக்குக ள் வழிகாட்டி யின் பிரகாரம் நடவடிக்கை க எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (இ) | நிதி மற்றும் ஊடக அமைச்சின் 2018 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 03/2018 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தி | 7,700,000 | 2019 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் திணைக்களம் பயன்படுத்திய வாகனங்களின் உரிமையை பொறுப்பேற்றல் சம்பந்தமான சிக்கலைகளைத் தீர்த்து வைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் அடிக்கடி உரிய அமைச்சு மாற்றமடைதல் மற்றும் கொம்ப்ட்ரோலர் ஜெனராலினால் குத்தகை முறைமையின் கீழ் பெற்றுக்கொண்டு காணி அமைச்சின் செயலாளர் பெயருக்கு வழங்கியுள்ள வாகனங்களின் உரிமையை குத்தகை முடிவடைந்து இலங்கை வங்கியினால் காணி அமைச்சின் செயலாளருக்கு ஒப்படைக்கப்படாமையின் காரணத்தினால் ரூபா 7,700,000 பெறுமதியான 02 வாகனங்களை மீளாய்வாண்டின் இறுதிவரை திணைக்களத்தின் பெயரில் பதிவு செய்துகொள்ள முடியாதிருந்தது. | உரிமையை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வாகனங்களின் உரிமை திணைக்களத்திற்கு பொறுப் பேற்கப்பட வேண்டும். |

**2.2 வங்கிக் கணக்குகள் செயற்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரை செலுத்தப்பட்ட ஆனால் வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத ரூபா 6,380,684 பெறுமதியான 113 காசோலைகள், 2023 சனவரி 03 முதல் பெப்ரவரி 28 வரையான காலப்பகுதியிலேயே கணக்குப் பிரிவால் சம்பந்தப்பட்ட நபர்கள் அல்லது நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. அதன்படி அவை 02 முதல் 24 வேலை நாட்கள் வரையான காலப்பகுதியில் கணக்குப் பிரிவில் காணப்பட்டமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | பற்றுச்சீட்டுக்களை சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்பட்டதால், காசோலைகள் கணக்குப் பிரிவில் இருந்தன. | காசோலைகள் எழுதப்பட்டவுடன் கைமுறையாக அல்லது பதிவுத் தபால் மூலம் பணம் செலுத்தப்பட வேண்டியவருக்கு ஒப்படைக்கப்பட வேண்டும். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தூரநோக்கும் செயற்பணியும்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் தூர நோக்கு ‘‘இலங்கையின் நில வளத்தினை சிறப்பாகவும் நிலையாகவும் பயன்படுத்துதல்’’ என்பதுடன், செயற்பணி ‘‘சுற்றாடல் சமநிலைத்தன்மையைப் பேணி நிலைபேறாகவும் சிறப்பாகவும் நிலத்தை பயன்படுத்துவதற்கான கொள்கையை உருவாக்குதலும் திட்டங்களைத் தயாரித்து அமுல்ப்படுத்துவதற்கு உதவியளித்தலும்’’ என்பதாகும். அந்த நோக்கத்திற்காக, 2007 ஆம் ஆண்டில் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய நிலப் பயன்பாட்டுக் கொள்கையின் திருத்தத்திற்கு, 2018 ஆகஸ்ட் இல், அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டது. அதன்படி, முக்கிய பணியாகிய இலங்கைக்கான தேசிய நிலப் பயன்பாட்டுக் கொள்கைகளைத் தயாரித்தல் மற்றும் தற்போதைய தேவைகளுக்கு ஏற்ப அதனை திருத்துவதற்காக தயாரிக்கப்பட்ட இறுதி வரைவு காணி மற்றும் சுற்றுலா அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், தேசிய காணி பயன்பாட்டுக் கொள்கை தயாரிக்கும் பணிகள் நிறைவடையவில்லை. | தேசிய நிலப் பயன்பாட்டுக் கொள்கைகளைத் திருத்துவதற்காக தயாரிக்கப்பட்ட இறுதி வரைவு காணி மற்றும் சுற்றுலா அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | தேசிய நிலப் பயன்பாட்டுக் கொள்கைகளைத் திருத்தங்கள் விரைவில் மேற்கொள்ளப்படல்வேண்டும். |

### 3.2 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்ட வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் 2022 சனவரி 19 அன்று , கணக்கீட்டு அலுவலரால் ஒரு மாத கால தாமதத்திற்குப் பின்னர் அங்கீகரிக்கப்படடிருந்ததுடன் பிரதான கணக்கீட்டு அலுவலரின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | எதிர்வரும் வருடங்களில் முறையான வகையில் நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பால் (FAO) 2022 பெப்ரவரி 02 அன்று நில பயன்பாட்டுக் கொள்கை திட்டமிடல் திணைக்களத்திற்கு 03 GPS உபகரணங்கள் நன்கொடையாக வழங்கப்பட்டிருந்தது. ஆனால் அவற்றின் பெறுமதி மதிப்பிடப்பட்டு சொத்துக்களாகக் கணக்கிடப்படவில்லை. | கணக்கிடப்படுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | உபகரணங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு சொத்துக்களாகக் கணக்கிடப்பட வேண்டும். |

## 3.4 அரச உத்தியொகத்தர்களுக்கான பிணை வைத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நி.பி. 880 (i) இன் பிரகாரம் அரசாங்க கணக்கு தொடர்பான வவுச்சர்களை சான்றுப்படுத்துபவர்களும் காசோலைகளில் கையொப்பமிடுபவர்களும் தங்கள் கடமைகளை நேர்மையாகச் செய்வதாக 612 வது அதிகாரத்தின்படி அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை அதிகாரச்சட்டத்திற்கு இணங்க மற்றும் திறைசேரி செயலாளரால் வெளியிடப்பட்ட 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரிவு 9.1 இல் பிணை வைக்கப்பட வேண்டியதாக மேலும் வலியுறுத்தப்படடிருந்தும் , திணைக்களத்தால் அவ்வாறு பிணை வைப்புச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | மேற்கொண்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | பிணை வைப்புச் செய்யப்பட வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து பிணையைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. நல்லாட்சி

## 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 40 (1) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் திணைக்களத்திற்கு 2022 பெப்ரவரி 01 | கணக்கீட்டு அலுவலருக்கு உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை நியமிப்பதற்கான அதிகாரம் இல்லை என்பதுடன் | உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் விரைவில் நியமிக்கப்பட |

| | | |
|---|---|---|
| இலிருந்து உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்படவில்லை. | அது நியமன அதிகாரிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | வேண்டும். |

**4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 சனவரி 12 ஆம் திகதிய DMA/1-2019 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் குறைந்த பட்சம் ஒரு காலாண்டிற்கு ஒரு தடவை வீதம் வருடத்திற்கு 04 முறையாவது நடத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் 02 குழுக் கூட்டங்கள் மட்டுமே நடாத்தப்பட்டன. | உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் இல்லாமையால் 02 கூட்டங்கள் நடாத்தப்பட்டன. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும். |

**5. மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 697 ஆக இருந்த போதிலும் உள்ளபடியான எண்ணிக்கை 620 ஆக இருந்தது.<br>அதன் பிரகாரம் சிரேஷ்ட மட்டத்தில் 21 வெற்றிடங்கள், மூன்றாம் மட்டத்தில் 01 வெற்றிடம், இரண்டாம் மட்டத்தில் 36 வெற்றிடங்கள் மற்றும் ஆரம்ப மட்டத்தில் 19 வெற்றிடங்கள் உட்பட மொத்த வெற்றிடங்கள் 77 ஆகக் காணப்பட்டிருந்தும், மீளாய்வாண்டின் செயலாற்றல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிறுவனத்தின் செயல்திறன் குறிகாட்டிகளின் (செயல் நடவடிக்கை திட்டத்தின் அடிப்படையில்) எதிர்பார்க்கப்படும் வெளியீட்டின் சதவீதமாக உண்மையான வெளியீடு 75 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் இருந்தது. அதன்படி, அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை குறித்து மீளாய்வு செய்யப்பட வில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | 2022 ஆம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் காரணமாக, குறைந்த அளவு ஒதுக்கீட்டைப் பெற்றதன் காரணமாக, குறைந்த பணியாளர்களைக் கொண்டு செயல்திறன் அடையப்பட்டதுடன் திணைக்களத்தின் உகந்த பணிகளுக்காக தற்போது அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கையில் தேவை உள்ளது. | நிறுவனத்தின் ஊழியர்களின் எண்ணிக்கை தொடர்பாக மீண்டும் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் பதவியணி ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டும். |